1

## சிறப்பு வரைபடம் 1.10
## முக்கிய குறிகாட்டிகளில் பிரதிபலித்த மேம்பட்டுவரும் இறைச் செயலாற்றம்

### மீண்டெழும் செலவினம் மொத்த அரசிறையின் சதவீதமாக




### வட்டி கொடுப்பனவுகள் மொத்த அரசிறையின் சதவீதமாக




### வட்டி கொடுப்பனவுகள் மீண்டெழும் செலவினத்தின் சதவீதமாக




### மொ.உ.உற்பத்தியில் மத்திய அரச படுகடன் விகிதம்




பொதுவாக, கட்டமைப்புசார் சமமின்மைகளை நிவர்த்திசெய்வதில் மட்டுப்படுத்தப்பட்ட முன்னேற்றத்துடன் கூடிய இறை தேக்கநிலையின் கட்டமாக பொருளாதார நெருக்கடிக்கு முந்திய காலகட்டம் காணப்பட்டது. உலகளாவிய நோய்த்தொற்று மற்றும் அதைத்தொடர்ந்தான பொருளாதார நெருக்கடி காலப்பகுதியில், மொத்த அரசிறையில் வட்டி கொடுப்பனவுகளின் சதவீதம் மற்றும் மொ.உ.உற்பத்தியில் படுகடனின் விகிதங்கள் குறிப்பிடத்தக்களவில் உயர்வடைந்ததுடன், இறைக் குறிகாட்டிகள் குறிப்பிடத்தக்களவில் நலிவடைந்து, பொது நிதிகளின் மீதான அதிகரித்த சுமையை எடுத்துக்காட்டின. நெருக்கடிக்குப் பின்னரான காலப்பகுதியில், அரசிறையினை அடிப்படையாகக் கொண்ட இறைத் திரட்சி வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியமையானது இறை அழுத்தங்களை குறிப்பிடத்தக்களவிற்கு தளர்த்துவதற்கு பங்களித்திருந்தது. மொத்த அரசிறையானது மீண்டெழும் செலவினத்தை விஞ்சியுள்ளதோடு, இதன்விளைவாக, மொத்த அரசிறையில் மீண்டெழும் செலவின் சதவீதம் 95.4 சதவீதமாகக் குறைவடைந்து, அண்மைய காலத்தில் மிகக் குறைந்த மட்டத்தை அடைந்துள்ளது. நெருக்கடியின் போது மொத்த அரசிறையில் அரைவாசிக்கும் அதிகமானதை உள்ளீர்த்துக்கொண்ட வட்டிக் கொடுப்பனவுகள் வீழ்ச்சியடைந்திருந்த அதேவேளை மொ.உ.உற்பத்தியில் படுகடனின் விகிதமும் சரிவடைந்து, இறை நிலைமைகளின் ஒட்டுமொத்த முன்னேற்றத்தைப் பிரதிபலித்திருந்தது. அண்மைய நெருக்கடியின் போது அனுபவிக்கப்பட்டதைப் போன்று இறைச் சமமின்மைகளிலிருந்து தோற்றம்பெறும் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய மோசமான பேரண்டப்பொருளாதார விளைவுகளின் சாத்தியப்பாட்டை குறைத்து, தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் இறைத் திரட்சி நிகழ்ச்சித்திட்டம் செயற்றிறன்மிக்கதாக அமைந்துள்ளதென இக்குறிகாட்டிகள் காண்பிக்கின்றன.